1984 பிப்ரவரி 16]

தலைஞாயிறிலிருந்து வேதாரண்யத்திற்குப் பேருந்து விடுதல்.

*30. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறிலிருந்து கரியாப்பட்டிணம், வாட்டாகுடி, குரவப்புலம் வழியாக வேதாரண்யத்திற்குப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, இந்தக் கேள்வியும், இதற்கு முந்தைய கேள்வியும் ஒரே மாதிரியானாலும், மேலே நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொன்னால் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அந்தக் கேள்வி முடிந்துவிட்டது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, வினா 29-ம், 30-ம் ஒரே மாதிரிதான். நடவடிக்கையும் ஒரே மாதிரி தான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. துணைத் தலைவரைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சி நிரலில் காணும் அடுத்த அலுவல் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதாகும். தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளில் 5-வது விதியைச் சேர்ந்த (4) துணை விதியின் கீழ், இப்பதவிக்கு முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளவர் பெயரையும், அவரின் பெயரை முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களையும் முதற்கண் இந்த அவையில் நான் படிக்க வேண்டும். அவர்கள்—நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்—திரு. ஜி. சுவாமிநாதன்; முன்மொழிந்தவர்—மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்; வழி மொழிந்தவர்—திரு. க. இராமமூர்த்தி; நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்